<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. 61/2025</u>

LW : 5 PW : 3

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சத்தியமூர்த்தி | த /பெ. | பஞ்சநாதன் |
| கிராமம் | வேட்டைதிடல் | தாலுக்கா | மன்னார்குடி |
| தொழில் | விவசாயம் | வயது | 63 |

LW : 5 PW :3

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

07.08.2025

**முதல்விசாரணை**

நான் பாமணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக இருந்தேன். என்னுடைய உறுப்பினர் எண் 2084. மேற்படி சங்கத்தில் என்னை 09.05.2013 ஆம் தேதி தீர்மானம் நிறைவேற்றி இயக்குநராக தேர்ந்தெடுத்தார்கள். நான் சங்கத்தில் இயக்குநராக நியமித்தபிறகு ஒன்றிரண்டு கூட்டங்களுக்கு சென்றுள்ளேன். நான் கூட்டத்தில் கலந்துகொண்டால் அமர்வு படி ரூ.100 வழங்குவார்கள். நான் அந்த கூட்டத்திற்கு செல்லவில்லை ஆனால் நான் கலந்துகொண்டதாகவும், ரூ.100 பெற்றதாகவும் கணக்கு எழுதியுள்ளார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

2) **என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 6 தீர்மான புத்தகம் பதவி ஏற்றுக்கொண்ட விவரங்கள் பக்கம் 44, 45 ல் எழுதப்பட்டுள்ளது அது அதசாஆ 7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

3)என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் வரிசை எண் 6 தீர்மான புத்தகம் பதவி ஏற்றுக்கொண்ட விவரங்கள் பக்கம் 49, 50 ல் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

4) நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் பிரிவு 81 விசாரணை வாக்குமூலம் வரிசை எண் 55 ல் 1 முதல் 8 வரையிலான பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. வரிசை எண் 55 ல் 1 முதல் 8 வரையிலான பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் சேர்த்து **அதசாஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை**

5) நான் சங்க பொறுப்பு மட்டும் அல்லாமல் அரசியலிலும் பல பொறுப்புகளில் இருக்கிறேன் என்றால் சரிதான். நான் இயக்குநராக இருந்த காலத்தில் எந்தெந்த தேதிகளில் கூட்டங்கள் நடந்தன என்பதோ எந்தெந்த கூட்டங்களில் நான் கலந்துகொள்ளவில்லை என்பதையோ என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். நான் சுமார் 10 ஆண்டுகளாகவே உடல்நிலை பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்றால் சரிதான்.

6) கூட்டத்திற்கு சென்றிருக்கும் வேளையில் கூட்டம் முடிந்தபிறகுதான் தீர்மானங்கள் எழுதப்பட்டு கையெழுத்து வாங்குவார்கள் என்றால் சரிதான். அதுபோல் நான் கூட்டங்களில் கலந்துகொண்ட சமயங்களில் வேறு வேலைகள் இருந்தால் கையொப்பம் போடாமலேயே சென்றுவிடுவேன் என்றால் சரிதான்.

7) என்னுடைய கையெழுத்து உள்ள வரிசை எண் 55 ல் 1 முதல் 8 வரையிலான பக்கங்களில் உள்ள கையொப்பங்கள் அனைத்தும் சேர்த்து **அதசாஆ 8** பிரிவு 81 விசாரணை வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நாளில் பிரிவு 81

விசாரணை உத்தரவு நடைமுறையில் இல்லை என்றும் அந்த காலகட்டத்தில் வாங்கப்பட்டதாக சொல்லப்படும் வாக்குமூலம் சட்டபிழையுடையது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

LATHA

Digitally signed by LATHA
Date: 2025.08.18 18:00:02 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,
திருவாரூர்.

<u>தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாரூர்</u>

<u>C.C. 61/2025</u>

LW:3 PW : 2

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07 ம் தேதி ஆணையுறுதி சட்டம் 1969 பிரிவு 4ன் படி திருமதி. G. புனிதா, நிலை 2 பெஞ்ச் கிளார்க் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜேந்திரன் | த /பெ. | அய்யாக்கண்ணு |
| கிராமம் | வாஞ்சியூர் | தாலுக்கா | மன்னார்குடி |
| தொழில் | விவசாயம் | வயது | 73 |

LW: 3 PW:2

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் மற்றும் அரசு தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

07.08.2025

**முதல்விசாரணை**

நான் பாமணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய உறுப்பினர் எண் எனக்கு தெரியவில்லை. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியவில்லை. யாரும் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

2) பாமணி தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன். என்னுடைய உறுப்பினர் எண் 3068 என்றால் எனக்கு ஞாபகம்



இல்லை. மேற்குறிப்பிட்ட சங்கத்தில் என்னை சங்க துணை தலைவராக தீர்மானம் போட்டு தேர்ந்தெடுத்தார்கள். 09.05.2019 ம் தேதிய தீர்மானத்தின்படிநான் துணை தலைவராக பதவி ஏற்றுக்கொண்டேன். நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் கூட்டுறவு சங்க தீர்மான புத்தகம் வரிசை எண் 6 பக்கம் 43 முதல் 45 வரையான பக்கங்களில் தீர்மானம் எழுதப்பட்டு என்னை துணை தலைவராக தேர்ந்தெடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அது **அதசாஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. சங்ககூட்டம் நடைபெற்று அந்த கூட்டத்தில் நிறைவேற்றப்படும் தீர்மானத்தில் தலைவர், துணைதலைவர், செயலாளர் ஆகியோர்கள் கையெழுத்திடுவார்கள் என்றால் சரிதான். கூட்டத்தில் கலந்துகொள்பவர்களுக்கு அமர்வு படி ரூ.100 வழங்குவார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. சங்கத்தில் தினகரன் செயலாளராகவும், சுரேஷ் உர விற்பனையாளராகவும், குமார் எழுத்தராகவும் பணிபுரிந்தார்கள் என்றால் சரிதான்.

3) 08.06.2015 ம் தேதி பிரிவு 81 விசாரணை அதிகாரி என்னை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் எனக்கு தெரியாது. என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் பிரிவு 81 அலுவலரால் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் எழுதப்பட்டுள்ள விவரங்கள் என்ன என்றால் அது எனக்கு தெரியாது. அந்த கையெழுத்து மட்டும் **அதசாஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனக்கு வழக்கு விவரங்கள் தெரியும் என்றாலும், எதிரிகளை வழக்கிலிருந்து காப்பாற்ற பொய்சாட்சியமளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

4) அதசாஆ 6 ல் உள்ள என்னுடைய கையெழுத்து உள்ள பிரிவு 81 விசாரணை வாக்குமூலம் பெறப்பட்டதாக சொல்லப்படும் நாளில் பிரிவு 81விசாரணை

உத்தரவு நடைமுறையில் இல்லை என்றும் அந்த காலகட்டத்தில் வாங்கப்பட்டதாக சொல்லப்படும் வாக்குமூலம் சட்டபிழையுடையது என்றாலும் அதுபற்றி எனக்கு தெரியாது.

LATHA Digitally signed by LATHA Date: 2025.08.18 18:00:10 +0530

தலைமை நீதித்துறை நடுவர்,

திருவாரூர்.